செய்தி வெளியீடு எண்:324 நாள்:24.06.2009

பத்திரிக்கை செய்தி

# இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சை திட்டம்

ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் இருதய நோய் அறுவை சிகிச்சைக்காக, சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை இராசாசி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் பதிவு செய்து காத்திருக்கும் நிலையை களைந்து அவர்கள் உடனடியாக தனியார் மருத்துவமனைகளில் அறுவை செய்து கொள்ள ஏதுவாக ''இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சை திட்டம்'' என்ற திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் **21.11.2007** அன்று கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை **24** தனியார் மருத்துவமனைகள் இருதய அறுவை சிகிச்சை செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலவச அறுவை சிகிச்சை செய்துகொள்ள பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.**50,000**–க்கும் குறைவாக இருக்க வேண்டும். இளம் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும் தனியார் மருத்துவமனைகளுக்கு அரசே ரூபாய் எழுபதாயிரம் வரை கொடுத்து வந்தது. தற்போது இந்த அதிகபட்ச தொகை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை **653** குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இளம்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ''பள்ளி சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம்,'' மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் **85**–வது பிறந்த நாளான, **03.06.2008** அன்று சிந்தாதிரிப்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இருதய அறுவை சிகிச்சைக்குத் தகுதியான மாணவர்களை கண்டறிவதற்காக, தமிழகம் முழுவதும் இருதய பாதிப்புள்ள **9,370** மாணவர்களுக்கு சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழு, ஒவ்வொரு

மாவட்டத்திலும் ஜுன் மாதம் முழுவதும் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டது. இதில் 2,396 மாணவர்கள் இருதய அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

இருதய அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்ட மாணவர்கள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளுக்கும், அரசு பொது மருத்துவமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு மேலும் சில மருத்துவ பரிசோதனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு இருதய அறுவை சிகிச்சைக்கு முற்றிலும் தகுதியான மாணவர்கள் எனக் கண்டறியப்பட்ட பின், இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அறுவை சிகிச்சைக்கு தகுதியான மாணவர்கள் என 1,855 மாணவர்கள் கண்டறியப்பட்டனர். இவர்களில் இதுவரை 1,610 பள்ளி மாணவர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இரண்டு திட்டங்களிலும் இதுவரை 2263 குழந்தைகளுக்கு தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 13.37 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

இவைகள் தவிர கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 1300 குழந்தைகளுக்கும், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் 257 குழந்தைகளுக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் 3,820 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இன்று (24.06.2009) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், இதுவரை அறுவை சிகிச்சை செய்யப்பட்ட சிறார்கள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் விளக்கினார். அப்போது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., டாக்டர் மூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.